(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 446.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2015 ஏப்பிறல் 07, செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4794/ '14

1.

கௌரவ அசோக் அபேசிங்க,— புத்தசாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் தாபிக்கப்பட்டுள்ள "சாசனாரக்ஷக பலமண்டல" எனப்படும் சபைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) குருணாகல் மாவட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள சாசனாரக்ஷக பலமண்டலவின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) சாசனாரக்ஷக பலமண்டலவின் செயலாளர்களாக சேவையாற்றும் பௌத்த தேரர்களின் மேற்படி சேவைக்காக ஏதேனும் வேதனாதிகள் அல்லது நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) மேற்படி கொடுப்பனவானது பாராட்டத்தக்கதொரு சேவையை ஆற்றுவதற்கு போதுமானதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4824/ '14

2.

கௌரவ புத்திக பதிரண,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை தரைப்படையினால் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்கள் தரைப்படையின் சிரேஷ்ட அதிகாரிகளின் தனிப்பட்ட பாவனைக்காக பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்;

(ii) இவ்வாகனங்களுக்கான எரிபொருள் அரசாங்கத்திலிருந்து பெறப்படுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வாடகை அடிப்படையில் பெறப்பட்ட சொகுசு வாகனங்களை சிரேஷ்ட அதிகாரிகளின் தனிப்பட்ட பாவனைக்குப் பயன்படுத்துவதற்கு இலங்கை தரைப்படையினதும் பாதுகாப்பு அமைச்சினதும் இணக்கப்பாடு பெறப்பட்டுள்ளதா;

(ii) இன்றேல், மேற்படி வாகனப் பாவனை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அவ்விசாரணையின் பெறுபேறு யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5092/ '14

3.

கௌரவ அனுர திஸாநாயக்க,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த 5 வருடங்களில் இலங்கை அரசினால் உகண்டா அரசுக்கு ஏதேனும் நிதியுதவிகள் அல்லது கருத்திட்டங்களுக்கான உதவிகள் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இவ் உதவிகளின் நிதி ரீதியான பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iii) அந்நாட்டுக்கு ஏதேனும் நிர்மாணிப்புக் கருத்திட்டம் வழங்கப்பட்டிருப்பின் இந் நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறை யாது என்பதையும்;

(iv) இந் நிதியுதவி அல்லது கருத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டதன் நோக்கம் யாது என்பதையும்;

(v) இலங்கை அரசு பெருமளவில் வெளிநாட்டுக் கடன்களை செலுத்த வேண்டியிருக்கையில் மேற்குறிப்பிட்டவாறு வேறு நாடுகளுக்கு உதவியளித்தல் பயனற்றதொரு செயற்பாடு அல்லவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5501/ '14

4.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு பயன்படுத்துகின்ற அளவுகோள்கள் யாவை என்பதையும்;

(ii) அதற்கு பயன்படுத்தப்படுகின்ற ஒரேயொரு அளவுகோள் க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் Z பெறுமதி எனில், மாவட்ட அடிப்படையில் அனுமதிக்கப்படுகின்றபோது, மாணவர்கள் குறைவாக அனுமதிக்கப்படும் மாவட்டங்களின் மாணவர்களிடமிருந்து மிக அதிக Z பெறுமதியையும் அதிக மாணவர்கள் அனுமதிக்கப்படும் மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களிடமிருந்து மிகக் குறைந்த Z பெறுமதியும் வெட்டுப்புள்ளிகளாக பயன்படுத்தப்படுவதன் ஊடாக, குறைவாக மாணவர்கள் அனுமதிக்கப்படும் மாவட்டங்களை சேர்ந்த மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றதென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி அநீதியை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5577/ '14

5.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— உள்ளகப் போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டின் யூன் மாதம் 30 ஆம் திகதி வரையான காலத்தில் இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான சிதைவுற்ற இரும்பு விற்பனை செய்யப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் விற்பனை செய்யப்பட்ட இரும்பின் அளவு தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி இரும்பு விற்பனையின் போது கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் விற்பனை செய்யப்பட்ட இரும்பின் அளவு தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(v) இதன் மூலம் இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு கிடைத்த வருமானம் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் கேள்விப்பத்திர நடைமுறையின்றி செயலாற்றிய சந்தர்ப்பங்கள் உண்டா என்பதையும்;

(ii) ஆமெனின், சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) அது மேற்கொள்ளப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(iv) அவ்வாறு விற்பனை செய்யப்பட்ட இரும்பின் அளவு எவ்வளவென்பதையும்;

(v) இவை எத்தகைய நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டதென்பதையும்;

(vi) ஒவ்வொரு நபருக்கும் விற்பனை செய்யப்பட்ட இரும்பின் அளவு தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(vii) இதன் மூலம் இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு கிடைத்த வருமானம் தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5774/ '14

6.

கௌரவ பாலித தெவரப்பெரும,— அரசாங்க நிருவாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மத்துகம பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில், ஹொரவள உப அலுவலக எல்லையில், ஹொரவள தியகிதுலகொட வத்த, மத்துகம-அளுத்கம வீதிக்கு முகப்பாக அமைந்துள்ள திரு. அமரபால ஜயநெத்திக்குச் சொந்தமான 2.8 பேச்சஸ் பரப்புடைய சிறிய காணியொன்றில் நிரந்தரக் கட்டம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான திட்டவமைப்புக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி கட்டடம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் அயலிலுள்ள வீடுகளுக்குச் செல்லும் வீதிக்கும், அயலில் அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களுக்கும் இடையூறு ஏற்படும் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டடத்தின் திட்டவமைப்பை அங்கீகரித்தல் அரசாங்கத்தின் சட்டதிட்டங்களின்படி மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அந்தக் கட்டடத்தின் திட்டவமைப்பிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள நடைமுறை யாதென்பதையும்;

(iii) அந்த அங்கீகாரம் எத்தரப்பின் தேவைக்கமைய வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) அரசாங்கத்தின் சட்டதிட்டங்களின்படி வீடு அல்லது கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான அனுமதியை வழங்குவதற்காக காணப்பட வேண்டிய குறைந்தபட்ச நிலப்பரப்பு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5896/ '15

7.

கௌரவ கீதாஞ்சன குணவர்தன,— கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் கைத்தொழில் அபிவிருத்தியின் போது உள்ளூராட்சி நிறுவன மட்டத்தில் புதிய கைத்தொழில் பேட்டைகளை தாபிப்பதற்கு அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) புதிய கைத்தொழில் பேட்டையொன்றை நிர்மாணிப்பதற்கு அவிசாவளை தேர்தல் தொகுதியின், சீதாவக்க பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தின், சாலாவ தோட்டத்தின், கனம்பல்ல பிரிவிலிருந்து 50 ஏக்கர் காணியை விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழில் பேட்டையை ஆரம்பிப்பதற்கு அப் பிரதேசத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் முக்கியமாகுமென்பதையும்,

(iii) தற்போது மேற்படி கைத்தொழில் பேட்டையை மையமாகக் கொண்ட வீதி அபிவிருத்தியின் ஒரு கட்டமாக அஸ்வத்த மற்றும் ரங்வலவை இணைக்கும் வகையில் களனி கங்கைக்கு குறுக்காக புதிய பாலமொன்றை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) மேற்படி ஆ (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணியை சுவீகரித்தல் தொடர்பாக அடையப்பெற்றுள்ள முன்னேற்றம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4801/ '14

8.

கௌரவ அசோக் அபேசிங்க,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடு முழுவதிலும் சேவையாற்றுகின்ற குடும்ப சுகாதார பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) நாடு தழுவிய சேவைக்கு தேவையான குடும்ப சுகாதார பணியாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) தாதியர் பணியாட்டொகுதியினருக்கு பேறுகாலப் பயிற்சியை வழங்குவதற்கு கொள்கை ரீதியான தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) பேறுகால பயிற்சியை வழங்குவது தொடர்பாக தாதியர் மற்றும் குடும்ப சுகாதார பணியாளர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள பிணக்கை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4825/ '14

9.

கௌரவ புத்திக பதிரண,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது தரைப்படையின் கடமைகளுக்காக வாடகை அடிப்படையில் குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்கள் பெறப்பட்டுள்ளனவா என்பதைக் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், அவ்வாறு பெறப்பட்டுள்ள வாகன வகைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) குளிரூட்டப்பட்ட வாகனமொன்றுக்கு மாதாந்தம் செலுத்தப்படும் வாடகை, அவ் வாகன வகைகளுக்கேற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) பொதுவான பாதுகாப்புப் பணிகளில் மேற்படி வாகனங்கள் ஈடுபடுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(ii) இன்றேல், உத்தியோகத்தர்களின் போக்குவரத்துக்காக மேற்படி வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) தரைப்படை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டுள்ள குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்களுக்கு மாதமொன்றுக்கு செலுத்தும் வாடகை யாதென்பதையும்;

(ii) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் மேற்படி வாகனங்ளுக்கு செலுத்தப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

5578/ '14

10.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டில் பொரளை ஆயுர்வேத வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைபெறும் நோயாளிகளுக்காக இருந்த கட்டில்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) தற்போது மேற்படி வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைபெறும் நோயாளிகளுக்காக உள்ள கட்டில்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையிலான காலத்தினுள் மேற்படி வைத்தியசாலையிலுள்ள கட்டில்களின் எண்ணிக்கை குறைந்திருப்பின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 2020 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக தயாரிக்கப்பட்டுள்ள கொழும்பு நகரத் திட்டத்தினுள் பொரளை ஆயுர்வேத வைத்தியசாலை உள்ளடங்கியுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4802/ '14

11.

கௌரவ அசோக் அபேசிங்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி யாது;

(ii) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் தொழில்வாய்ப்பு வளர்ச்சியடைந்துள்ளதா;

(iii) தொழில்வாய்ப்பு வீதம் கணிப்பிடப்படும் முறையியல் யாது;

(iv) தொழில் புரிவோராக பொருள்கோடப்படுவதற்கு பயன்படுத்தப்படும் வயது எல்லை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4826/ '14

12.

கௌரவ புத்திக பதிரண,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது இலங்கை விமானப்படையின் கடமைகளுக்காக வாடகை அடிப்படையில் குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்கள் பெறப்பட்டுள்ளனவா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், அவ்வாறு பெறப்பட்டுள்ள வாகன வகைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) குளிரூட்டப்பட்ட வாகனமொன்றுக்கு மாதாந்தம் செலுத்தப்படும் வாடகை, வாகன வகைகளுக்கேற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) பொதுவான பாதுகாப்புப் பணிகளில் மேற்படி வாகனங்கள் ஈடுபடுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(ii) இன்றேல், உத்தியோகத்தர்களின் போக்குவரத்துக்காக மேற்படி வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) இலங்கை விமானப்படை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டுள்ள குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்களுக்கு மாதமொன்றுக்கு செலுத்தும் வாடகை யாதென்பதையும்;

(ii) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் மேற்படி வாகனங்ளுக்கு செலுத்தப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

13.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது சுகாதார மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சினால் நிருவகிக்கப்படுகின்ற ஆயுர்வேத வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைகள் அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iii) 2013 ஆம் ஆண்டில் மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலிருந்தும் சிகிச்சை பெற்றுள்ள வெளிநோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் தங்கியிருந்து சிகிச்சைபெறும் நோயாளர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்கள்

1.

நிதி அமைச்சர்,— உண்ணாட்டரசிறை (திருத்தம்),— 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

2.

நிதி அமைச்சர்,— சேர்பெறுமதி வரி (திருத்தம்),— 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர் பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

3.

நிதி அமைச்சர்,— நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்),— 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

4.

நிதி அமைச்சர்,— நிதி,— மதுச்சாலைகள் மற்றும் தவறணைகள் அறவீடு, சீட்டாட்டத் தொழில் அறவீடு, அதிசுட்ட வரி, செல்லிடத் தொலைபேசி தொழிற்படுத்துநர் அறவீடு, வீட்டுக்கு நேரடி செய்மதிச் சேவைகள் அறவீடு, செய்மதி அமைவிட அறவீடு, அர்ப்பணிக்கப்பட்ட விளையாட்டு அலைவரிசை அறவீடு, மாளிகை வரி, குடியகல்வு வரி அத்துடன் மோட்டார் வாகன இறக்குமதியாளர்கள் உரிமக்கட்டணைத்தை விதிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட மற்றும் அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

5.

நிதி அமைச்சர்,— பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்),— 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்

6.

நிதி அமைச்சர்,— தொலைத்தொடர்பு அறவீட்டுத் (திருத்தம்),— 2011ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

7.

நிதி அமைச்சர்,— பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தம்),— 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்

8.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

நிதி அமைச்சர்,— உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— இதற்கு முன்னரான தீர்மானத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக ரூபா 400,000,000,000 ஐத் தாண்டாத தொகையொன்றை இலங்கையில் இலங்கை அரசாங்கத்தின் திறைசேரி உண்டியல்களை வெயிடுவதன் மூலம் கடனைப் பெறுவதற்கும், அதன் பொருட்டு (417 ஆவது அத்தியாயம்) உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச்சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் கீழ் தேவையான சகல அதிகாரங்களையும் நிதி அமைச்சருக்கு வழங்குவதற்கும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

காணி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

காணி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2014 ஒற்றோபர் 31 ஆந் திகதிய 1886/58 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.03.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 4.

அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தச் (சட்டமூலம்) — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.12.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

மின்வலு, எரிசக்தி அமைச்சர்.— இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 54 ஆம் பிரிவின் கீழ் மின்வலு, சக்தி அமைச்சரால் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் பேரில் மின்சார (அனுமதிப்பத்திரம் தொடர்பில் விண்ணப்பித்தலும் விலக்களிப்பும்) தொடர்பில் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 10 ஆம் திகதிய, 1883/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 11.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 12.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

13.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

15.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

16.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

17.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

18.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19.

இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

சம்பிக பிரேமதாச சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.